

# டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் சமுதாயக் காடுகள் திட்டம்

( தமிழகம் முழுவதும் ஒரு கோடி மரக்கன்றுகள் நட்டு, வளர்த்து, பராமரிக்கும் திட்டம் )

**டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் சர்வதேச அறக்கட்டளை**

**ஹவுஸ் ஆஃப் கலாம் - இராமேஸ்வரம்**

APJ ABDUL KALAM INTERNATIONAL FOUNDATION

Vanam Seivoam! Vaalviyal Kappoam!!

வனம் செய்வோம்! வாழ்வியல் காப்போம்!!

PMKKKY DISTRICT MINERAL FOUNDATION

# பிரதம மந்திரி கனிம வள நல திட்டம்
# மாவட்ட கனிம வள நிதி அறக்கட்டளை
# இராமநாதபுரம்

## (2019-2020 ம் ஆண்டு திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ்)

மற்றும்

## டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் சர்வதேச அறக்கட்டளை, ஹவுஸ் ஆஃப் கலாம், இராமேஸ்வரம்

இணைந்து

## டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் சமுதாயக் காடுகள் திட்டத்தின் கீழ்

(தமிழகம் முழுவதும் ஒரு கோடி மரக்கன்றுகள் நட்டு, வளர்த்து, பராமரிக்கும் திட்டம்)

## 2000 மரக்கன்றுகள் நடும் பணி

## பணி நிறைவு அறிக்கை

# திட்ட அறிக்கை

பிரதம மந்திரி கனிம வள நல திட்டம் – மாவட்ட கனிம வள நிதி அறக்கட்டளை இராமநாதபுரம் (2019-2020ம் ஆண்டு திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ்) டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் சர்வதேச அறக்கட்டளை, ஹவுஸ் ஆஃப் கலாம், இராமேஸ்வரம் உடன் இணைந்து டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் சமுதாயக் காடுகள் திட்டத்தின் கீழ் (தமிழகம் முழுவதும் ஒரு கோடி மரக்கன்றுகள் நட்டு, வளர்த்து, பராமரிக்கும் திட்டம்) 2000 மரக்கன்றுகள் நடும் பணிக்கான ஒப்பந்தம் பெறப்பட்டது.

முதற்கட்டமாக, இராமநாதபுரம் மாவட்டம், சக்கரக்கோட்டை டிஎஸ்பி 12-வது பட்டாலியன் புதிய கட்டிட கட்டுமான வளாகத்தில் முதல் மரக்கன்று 01.07.2020 அன்று, மாவட்ட ஆட்சித்தலைவர் உயர்திரு. கே. வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்களால் நடப்பட்டு பணி தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வளாகத்தைச் சுற்றிலும் 1500 மரக்கன்றுகள் நடப்பட்டு இரும்பினாலான பாதுகாப்பு கூண்டு வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக இராமேஸ்வரம், பேய்க்கரும்பில் உள்ள டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் தேசிய நினைவகம் அருகில், 15.10.2020 டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த தினத்தன்று, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே. வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்களால் மரக்கன்று நடப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தங்கச்சிமடம் முதல் பேய்க்கரும்பில் அமைந்துள்ள டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் தேசிய நினைவகம் வரையிலான தேசிய நெடுஞ்சாலையின் இருபுறங்களிலும், தேசிய நெடுஞ்சாலைத்துறையின் வழிகாட்டுதலுடன் 400 மரக்கன்றுகள் நடப்பட்டு சுற்றிலும் இரும்பினாலான பாதுகாப்பு கூண்டு அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தின் மண் வளத்திற்கு ஏற்ற, 6 அடி உயரத்திற்கும் குறையாத நாட்டு மரங்களான வேம்பு, புங்கை, புளி, வாகை, நாவல் போன்ற மரங்கள் நடப்பட்டுள்ளன.

# முதல் 1000 மரக்கன்றுகள் நடும் பணி

## முதல் மரக்கன்றை நட்டு வைத்து விழாவினை தொடங்கி வைத்தவர்:

உயர்திரு. **கே. வீர ராகவ ராவ் இ.ஆ.ப.,** அவர்கள்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

## முக்கிய விருந்தினர்கள்:

உயர்திரு. **டாக்டர். ஆர். வி. வருண் குமார் இ.கா.ப.,** அவர்கள்
மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்
இராமநாதபுரம் மாவட்டம்.

உயர்திரு. **டிஆர். டி. கார்த்திகேயன் எம்.காம்., டிபிஎஸ்.,** அவர்கள்
காமாண்டன்ட் - டிஎஸ்பி 12-வது பட்டாலியன்
மணிமுத்தாறு.

உயர்திரு. **கே. விஜயராகவன் எம்.எஸ்சி., எம்.பில்.,** அவர்கள்
துணை இயக்குனர் / கன்வீனர்
மாவட்ட கனிம வள நிதி அறக்கட்டளை,
இராமநாதபுரம் மாவட்டம்.

## சிறப்பு விருந்தினர்:

உயர்திரு. **ஆ.ப.ஜெ.மு.ஜெ. ஷேக் சலீம் எம்பிஏ.,** அவர்கள்
நிர்வாக அறங்காவலர்
டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் சர்வதேச அறக்கட்டளை,
இராமேஸ்வரம்

**இடம்:**

புதிய கட்டிடம் கட்டுமான வளாகம்,
டிஎஸ்பி 12-வது பட்டாலியன், சக்கரக்கோட்டை, இராமநாதபுரம்.

நாள் : 01.07.2020






RAGHAVA RAO.I.A.S.
COLLECTOR


KARTHIKEYAN, M.COM.
COMMANDANT


















# 2-வது 1000 மரக்கன்றுகள் நடும் பணி

**மரக்கன்றை நட்டு வைத்து விழாவினை தொடங்கி வைத்தவர்:**

உயர்திரு. **கே. வீர ராகவ ராவ் இ.ஆ.ப.,** அவர்கள்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

**முக்கிய விருந்தினர்கள்:**

உயர்திரு. **கே. விஜயராகவன் எம்.எஸ்சி., எம்.பில்.,** அவர்கள்
துணை இயக்குனர் / கன்வீனர்
மாவட்ட கனிம வள நிதி அறக்கட்டளை, புவியியல் மற்றும் சுரங்கம்
இராமநாதபுரம் மாவட்டம்.

உயர்திரு. **தாமு** அவர்கள்
மாணவர் பயிற்சியாளர், சென்னை.

**சிறப்பு விருந்தினர்கள்:**

உயர்திரு. **ஆ.ப.ஜெ.மு.ஜெ. ஷேக் தாவூத் எம்டெக்.,** அவர்கள்
நிர்வாக அறங்காவலர் – டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்
சர்வதேச அறக்கட்டளை, இராமேஸ்வரம்

உயர்திரு. **ஆ.ப.ஜெ.மு.ஜெ. ஷேக் சலீம் எம்பிஏ.,** அவர்கள்
நிர்வாக அறங்காவலர் – டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்
சர்வதேச அறக்கட்டளை, இராமேஸ்வரம்

இடம்:

**டாக்டர். ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் தேசிய நினைவகம்**
**பேய்க்கரும்பு, இராமேஸ்வரம்**

நாள் : 15.10.2020



2-வது 1000 மரக்கன்றுகள் நடும் பணியினை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர், உயர்திரு. கே. வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்கள், டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் பிறந்த தினமான அக்டோபர் 15, 2020 அன்று பேய்க்கரும்பில் உள்ள அவரது தேசிய நினைவகம் அருகே மரக்கன்றை நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.






DRDO


DRDO






DRDO
KARAN









RADHAN MANTRI KHANIJ KSHETRA
District Mineral Foundation Trust
Dr. APJ. அப்துல் கலாம்
INITIATIVE BY.







YOJANA (PMKKKY)
காடுகள் திட்டம்
SUPPORTED BY

# மக்கள் ஜனாதிபதி Dr. A.P.J. அப்துல் கலாம் அவர்களின் லட்சியக் கனவை நனவாக்க உறுதிமொழி எடுப்போம்!

## மாணவர்கள், இளைஞர்கள், மனித சமுதாயத்தினர் கடைபிடிக்க வேண்டிய 10 அம்ச உறுதி மொழிகள்



1. நான் எனது வாழ்க்கையில் நல்லதொரு லட்சியத்தை மேற்கொள்வேன். அதை அடைய கடுமையாக உழைப்பேன். எனது கல்வி அல்லது பணியை அர்ப்பணிப்பு உணர்வோடு தொடர்வேன்.

2. நான் நேர்மையோடு உழைப்பேன். ஊழலற்ற சமுதாயம் உருவாக பாடுபடுவேன். நேர்மையோடு வெற்றி பெறுவேன்.

3. நான் எனது விடுமுறை நாட்களில் எழுதப் படிக்கத் தெரியாத 10 பேர்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுப்பேன்.

4. என் வீட்டிலோ அல்லது பள்ளியிலோ குறைந்தபட்சம் 10 மரக்கன்றுகளை நட்டு அதை பாதுகாத்து வளர்ப்பேன். இதன் மூலம் பசுமையான பூமி, சுத்தமான எரிசக்திக்காக பாடுபடுவேன்.

5. மது, சூதாடுதல் மற்றும் போதை பழக்கங்களுக்கு ஆளாகி துயறுரும் 10 பேரையாவது அதிலிருந்து மீட்டு நல்வழிப்படுத்த நான் முயல்வேன். மேலும் எந்த பாரபட்சமும் இல்லாமல் மனித உயிர்கள் அனைத்தையும் பாதுகாத்து அவர்கள் கண்ணியத்தை உயர்த்த பாடுபடுவேன்.

6. எமது நாட்டின் இளைஞன் என்ற முறையில் என்னுடைய அனைத்து முயற்சிகளும் வெற்றி அடைய துணிவோடு உழைப்பேன். மற்றவர்களுடைய வெற்றியை பாராட்டி மகிழ்வேன்.

7. நான் ஜாதி, மதம், மொழி இவற்றின் பெயரால் எந்தவித பாகுபாடும் பாராட்டாது, எல்லோரிடமும் சமமாக நடந்து கொள்வேன்.

8. நான் எனது நம்பிக்கைக்கு இளைஞனாகவும், எனது சந்தேகத்துக்கு முதியவனாகவும் இருக்கிறேன். அப்போது எனது இதயத்தில் நம்பிக்கை என்ற ஒளியை ஏற்றுவேன். கஷ்டப்படும் எனது சகோதரர், சகோதரிகளின் இன்னல்களை தீர்க்கப் பாடுபடுவேன்.

9. நான் எனது தாய் மற்றும் தாய்நாடு இரண்டையும் நேசித்து பெண் குலத்துக்கு உரிய மரியாதையையும், கண்ணியத்தையும் அளிப்பேன். உடல் ஊனமுற்றவர்களுக்கு எப்போதும் நண்பனாக இருப்பதோடு அவர்கள் நம்மைப் போல் இயல்பாய் இருக்கும் உணர்வை ஏற்படுத்த உழைப்பேன்.

10. நான் நாட்டின் அறிவு தீபத்தை ஏற்றி அணையாத தீபமாக சுடர்விடச் செய்வேன். எனது தேசியக் கொடியை எனது இதயத்தில் பறக்க வைத்து என் நாட்டிற்கு பெருமை சேர்ப்பேன்.

APJ ABDUL KALAM®
INTERNATIONAL FOUNDATION

Add.: HOUSE OF KALAM, #12/7, Mosque Street, RAMESWARAM-623 526.
Ramanathapuram District. Tamil Nadu. INDIA.
Cell: +91 94877 71931, 94866 61931, 99404 88627, Ph: 04573-221931
Email: contact@houseofkalam.org | office@apjabdulkalamfoundation.org
Website: www.apjabdulkalamfoundation.org | www.abdulkalam.org
Twitter: @APJAbdulKalam | Instagram: apjabdulkalamfoundation
Facebook: APJAbdulkalamfoundationorg | Linkedin: APJAbdulKalamFoundation
YouTube: APJ ABDUL KALAM INTERNATIONAL FOUNDATION